www.Padasalai.Net www.TrbTnpsc.com

TVL9T

9231

திருநெல்வேலி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 9

காலஅளவு: 3.00 மணிநேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண்: 15)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 15×1=15

1) தமிழ் விடுதூது .............. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது

அ) தொடர்நிலைச்செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) 'மிசை' என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

3) பொருந்தாத இணை எது?

அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

4) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனறித் தேர்வு
ஆ) ஊரகத்திறனறித் தேர்வு
இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு
ஈ) மூன்றும் சரி

5) <u>பூவாது</u> காய்க்கும் <u>மலர்க்கை</u> - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப்பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறைவினையெச்சம், உவமைத்தொகை

6) இராவண காவியம் ஆசிரியர் ..............

அ) கண்ணதாசன் ஆ) சுரதா இ) புலவர் குழந்தை ஈ) பாரதியார்

7) பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று .............

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

8) வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே - இவ்வடிகள் உணர்த்தும் பொருள் யாது?

அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்
ஆ) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்
இ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாயக் கூடியிருந்தனர்
ஈ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

9) மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

10) ஐம்பெருங்குழு எண்பேராயம் சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

11) மரவேர் என்பது ............. புணர்ச்சி

அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கும் (12, 13, 14, 15) விடையளிக்க**

*காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் நெற்றிப்*
*பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து*
*தேமாங்கனி சிதறி வாழைப்பழங்கள் சிந்தும்*
*ஏமாங்கதம் என்று இசையால் திசை போயது உண்டே*

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

12) இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்
அ) பெரியபுராணம் ஆ) சிறுபஞ்சமூலம் இ) மதுரைக்காஞ்சி ஈ) சீவகசிந்தாமணி

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) சேக்கிழார் ஆ) திருத்தக்கத்தேவர் இ) தொல்காப்பியர் ஈ) பாரதிதாசன்

14) வருக்கை என்பதன் பொருள் ................
அ) தேங்காய் ஆ) புகழ் இ) பலாப்பழம் ஈ) உச்சி

15) இறைஞ்சி ............ இதன் இலக்கணக்குறிப்பு
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) வினையெச்சம் ஈ) இடைக்குறை

## பகுதி - II (மதிப்பெண்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** **4×2=8**
**வினா எண் 21க்கு கட்டாயம் விடையளிக்கவும்**

16) கண்ணி என்பதன் விளக்கம் யாது?

17) **விடைக்கேற்ற வினா அமைக்க**
அ) முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான்பென்னிகுவிக்
ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு

18) கூவல் என்று அழைக்கப்படுவது எது?

19) மூவாது மூத்தவர் நூல் வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக

20) நடுகல் என்றால் என்ன?

21) 'விடல்' என முடியும் குறட்பாவை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** **5×2=10**

22) கைபிடி கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

23) அறைந்தனன் - பகுபத உறுப்புகளைக் கூறுக

24) **உவமைத் தொடரை உருவகத் தொடராக மாற்றுக**
தேன் போன்ற மொழியைப் பவளவாய் திறந்து படித்தாள்

25) **கலைச்சொல் தருக.**
அ) Combination ஆ) Water Management

26) **மரபுப்பிழை நீக்க எழுதுக**
கயல் பானை செய்யக் கற்றுக்கொண்டாள்

27) **பொருத்தமான உரிச்சொல்லால் கோடிட்ட இடத்தை நிரப்புக**
அ) ................. விடுதும் (உறு, கடி)
ஆ) ............... மனை (கடி, தட)

28) தமிழ் எண்களை எழுதுக.
அ) 576 ஆ) 8234

## பகுதி - III (மதிப்பெண்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி.** **2×3=6**

29) பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணைய வழிச் சேவைகளை எழுதுக.

30) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக

31) முழு உருவச்சிற்பங்கள் - புடைப்புச்சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
www.Padasalai.Net

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** **2×3=6**

**(34வது வினா கட்டாயம்)**

32) மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?

33) சேர சோழ பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக?

34) **அடிபிறழாமல் எழுதுக**

'நீர் இன்று' எனத் தொடங்கும் புறநானூற்றுப்பாடல்

**(அல்லது)**

'பூவாது காய்க்கும்' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடல்.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** **2×3=6**

35) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக

36) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

37) **பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க**

தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்

**பகுதி - IV (மதிப்பெண்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5×5=25**

38) அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ் விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

39) அ) இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக

**(அல்லது)**

ஆ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க

40) அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

**(அல்லது)**


ஆ) உங்கள் நண்பர் பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ் இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

41) **அ) நயம் பாராட்டுக**

*கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்*
*காடும் செடியும் கடந்துவந்தேன்;*
*எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்*
*இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்;*
*ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல*
*ஏரி குளங்கள் நிரம்பி வந்தேன்;*
*ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்*
*ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்*

**(அல்லது)**

ஆ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42) அ) பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப்பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

1) Linguistics - ................ 2. Literature -................
3) Philologist - ................ 4. Polyglot - ................
4) Phonologist - ...............

## பகுதி - V (மதிப்பெண்: 24)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3×8=24

43) அ) நீரின்று அமையாது உலகு என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க

44) அ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக.

(அல்லது)

ஆ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி தருக.

45) அ) நூலகம் - நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

(அல்லது)

ஆ) கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.

முன்னுரை - சாலை பாதுகாப்பின் முக்கியத்துவம் - சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலை பாதுகாப்பு விதிகள் - சாலை விதி மீறல் - முடிவுரை.

- - - - - -

www.Padasalai.Net